செ. வெ. எண் 772

நாள் 30-11-07

# பத்திரிக்கை செய்தி

உச்ச நீதி மன்றம் தனது நீதிப் பேராணை (சிவில்) எண்.13029/85-ல் கல்வி நிறுவன வாகனங்கள் பள்ளிக் குழந்தைகளை வீட்டிலிருந்து பள்ளிக்கும் பின் பள்ளி முடிந்து வீட்டிற்கும் அழைத்துச் செல்லும்போது மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ள நடைமுறைகள், காவல் துறையினராலும் போக்குவரத்து துறையினராலும் கடைப்பிடிக்க வேண்டியவை எனத் தெரிவித்து வழங்கிய சில அறிவுரைகள் மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2) மேற்கூறப்பட்ட உச்ச நீதி மன்ற ஆணையில் வழங்கப்பட்ட அறிவுரைகள் போக்குவரத்து துறையின் செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடுமையாக செயல்படுத்த வேண்டுமென தெரிவித்து சுற்றறிக்கை மூலம் போக்குவரத்து ஆணையரால் அறிவுறுத்தப்பட்டது. அவை பின் வருமாறு:-

i) குற்றத்தின் தன்மையைப் பொறுத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஒட்டுநர் உரிமங்களை தற்காலிக நீக்கம் / ரத்து செய்தல் போன்ற கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ii) பள்ளி / கல்லூரிகளின் அருகே வேகத்தடை அமைத்து "பள்ளி எல்லை வேகம் குறைக்கவும்" என அறிவிப்பு பலகை வைக்கவும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

iii) அதிக வேகமாகவும், கவனக் குறைவாகவும் ஒட்டும் ஒட்டுநர்களையும் அவர்கள் பணிபுரியும் பள்ளி / கல்லூரி நிர்வாகத்தினரையும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் அழைத்து தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும். மீறும் ஒட்டுநர்கள் மீது தகுந்த சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

iv) அனைத்துப் பள்ளி வாகனங்களின் முன்புறமும், பின்புறமும் "பள்ளி வாகனம்" எனத் தெளிவாகவும், பெரிய எழுத்துக்களாலும் வண்ணத்தில் எழுதப்பட்டிருப்பதை

அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும், இயக்க ஊர்தி ஆய்வாளர்களும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

v) பள்ளி நிர்வாகம் வாடகை வாகனத்தை பள்ளி வாகனமாகப் பயன்படுத்தினால் "பள்ளிப் பணிக்காக" என்ற பலகை காண்பதற்கும் / படிப்பதற்கும் ஏதுவாக உள்ள வண்ணத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இதனை அவ்வப்போது தணிக்கைச் செய்யும் போதும் தகுதிச் சான்று புதுப்பித்தலின் போதும் போக்குவரத்து துறை கள அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

vi) உரிய மருந்துகள் முதலுதவிக்குத் தேவையான சாதனம் / பொருட்கள் அடங்கிய முதல் உதவிப் பெட்டி வாகனத்தில் கட்டாயம் வைத்திருப்பதை கள அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

vii) பள்ளிப் பேருந்துகளின் பக்கவாட்டு ஜன்னல்களில் மாணவர்களின் பாதுகாப்புக்காக கிரில் பொறுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

viii) ஒவ்வொரு பள்ளிப் பேருந்திலும் கட்டாயம் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதை கண்காணிக்க வேண்டும்.

ix) பள்ளி வாகனங்கள் அனைத்திலும், பள்ளியின் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் எழுதப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

x) பள்ளி வாகனத்தின் கதவுகள் உறுதியான தாழ்ப்பாள்கள் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3) உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பாணை நகல்களை மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் துணை காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கு அளிக்கும்படியும், தீர்ப்பாணையின் கருத்துக்களை பத்திரிக்கைகள் வாயிலாக பொது மக்களுக்கு தெரிவிக்கும்படி அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

4) போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட அறிவுரைகளின்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களாலும், இயக்க ஊர்தி ஆய்வாளர்களாலும் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அனைத்து பள்ளி / கல்லூரி நிர்வாகத்தினருக்கும் ஓட்டுநர்களுக்கும் உச்ச நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்தின் அறிவுரைகளை கடைபிடிக்க வலியுறுத்தப்பட்டது.

5) மேலும், சென்னை உயர்நீதி மன்றம் பொதுநல வழக்கு எண்.47114/02, 09.10.07 தேதியிட்ட தீர்ப்பில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் போக்குவரத்து துறை காவல்துறையினருக்கு சில கட்டளைகள் வழங்கியுள்ளது.

6) மேற்கூறப்பட்ட பொது நல வழக்கில் வழங்கிய அறிவுரைகளை நடைமுறைப்படுத்த போக்குவரத்து துறையின் அனைத்து செயலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளில் தேவையான திருத்தங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உச்சநீதி மன்ற மற்றும் உயர்நீதி மன்றம் வழங்கிய அறிவுரைகள் குறித்து போக்குவரத்துத்துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

7) மேலும் மேலே சொல்லப்பட்ட அறிவுரைகள் நடைமுறைப்படுத்துவது என்பது பலமுனை ஒழுங்கு நடவடிக்கையாக இருப்பதால் மாநிலத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், காவல்துறை ஆணையாளர்கள் தங்களது அனைத்துப் பிரிவுகளிலும் நடவடிக்கைகளை முடுக்கிவிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் வருவாய் கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு உயர்நீதி மன்ற வழிகாட்டுதல்களை கண்டிப்புடன் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப்பொருளை மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடக்கும் மாவட்ட

சாலை பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்களில் விவாதிக்கவும் ஆய்வு செய்யவும் ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கண்ட பொருளின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) எனவே, மேற்கண்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்திட பொதுமக்கள் அனைவரும், சம்பந்தப்பட்ட பிரிவினர் உட்பட தங்களது ஒத்துழைப்பினை நல்குமாறு இதன்மூலம் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.